[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மலைகளிலேதான் சந்தன மரங்கள் இயற்கையாக வளர்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார். வளர்ந்து வருகிற விஞ்ஞான உலகத்தில், கடலிலே கூட நெல் விளைவிக்கின்றார்கள். ஜப்பானிலே கடலிலேகூட நெல் விளைவிக்கிறார்கள். அப்படி தமிழ்நாட்டிலும் விஞ்ஞான ஆக்கப்பூர்வ சிந்தனையோடு, அக்கிரிகல்சுரல் காலேஜ் போன்ற விவசாய விஞ்ஞான கூடங்களிலே ஆராய்ச்சி செய்து கருவேல மரங்களை குளங்களிலே வளர்க்கிறோம் அல்லவா, அதற்குப் பதிலாக அரசே சந்தன மரங்களை கருவேல மரங்களுக்குப் பதிலாக குளங்களிலே வளர்க்கின்ற முயற்சியை ஆராய்ச்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவேல மரங்கள் போன்று சந்தன மரங்களை வளர்க்க முடியாது. நாம் கோவையிலே இருக்கிற ஆராய்ச்சிப் பண்ணையில் இதை ஆராய்ச்சி செய்து மரங்களை நட்டு வளர்க்க முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்தோம். அது வெற்றிகரமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது பல்வேறு ஆராய்ச்சிகளைப் பற்றி குறிப்பிட்டார். இன்றைக்குக்கூட கேன்சர் வருகிறது என்று சொன்னால், அதை நம்மால் ஆராய்ச்சி செய்து, பல்வேறு விஞ்ஞானங்கள் வளர்ந்து இருந்தாலும்கூட, வெற்றிகரமாக அதை குணப்படுத்த முடியவில்லை. இதுபோன்ற சில இயற்கைச் சக்திகள் இருக்கிறபோது, அரசாலும், ஆராய்ச்சியாலும், வெற்றி பெற முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 526, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

526—

பேருந்துகளில் படிக்கட்டுகளில் பயணம் செய்வோர்மீது கடுமையான நடவடிக்கை.

*11671—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :
மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பயணம் செய்யும் பயணிகள்மீதும் அனுமதிக்கின்ற நடத்துனர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் படிக்கட்டுகளில் பயணம் செய்யும் பயணிகள் மீதும் அனுமதிக்கின்ற நடத்துனர் மீதும் கடுமையான நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளிலே குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே இன்றைக்குச் சென்னையிலே பார்க்கின்ற போது, படிக்கட்டிலே பயணம் செய்கின்ற இடத்திலே அந்த பஸ்சே ஒரு பக்கம் அமுக்கிக்கொண்டு செல்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். அப்படி செல்கிறது மட்டுமல்லாமல், பயணிகள் அந்த பஸ்களிலே ஏறுவதற்கு முன்னாலேகூட, சில இடங்களிலே விசில் அடித்துவிடுகிறார்கள். அதனால் விபத்துக்கள் நடக்கின்றன. நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நடவடிக்கையை போக்குவரத்துத்துறை எடுக்கிறதா அல்லது காவல் துறை எடுக்கிறதா ? அதேநேரத்திலே காவல் துறையினர் கூட பல்லவன் போக்குவரத்துக் கழகம் வருகிறது என்றால் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்று புரியவில்லை. ஆகவே, இது போன்று தவறு செய்கின்றவர்கள், அரசுத் துறை பஸ்சாக இருந்தாலும்கூட, காவல் துறை அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டில் பயணம் செய்கின்றவர்களைப் பொறுத்த வரையிலும் காவல் துறைதான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. 1991-92-லேயிருந்து 31—12—1991 வரையிலும் தொடுக்கப்பட்ட வழக்குகள் 9,289. அதிலே, அத்தனைப் பேருக்கும் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே அபராதத் தொகையாக 92,891 ரூபாய் கிடைத்திருக்கிறது. 1992-லேயிருந்து 31—12—1992, அந்த ஆண்டு முழு ஆண்டிற்கு 13,581 பேர். அத்தனை பேருக்கும் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. 1,35,850 ரூபாய் கிடைத்திருக்கிறது. அதேபோல 1993-லிருந்து 28—4—1993 வரை 7,123 பேர், அத்தனை பேருக்கும் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. 71,230 ரூபாய் அபராதம் செலுத்தப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தப் பேருந்துகளிலே படிக்கட்டிலே பயணம் செய்கிற நேரங்களிலே வந்து பார்த்தால் i.e. peak hours, பள்ளிக்குச் செல்கிற நேரங்களில், அலுவலகங்களுக்குச் செல்கிற நேரங்களில், அலுவலகம் விட்டு திரும்புகிற நேரங்களில், இது போன்ற நேரங்களில்தான் படிக்கட்டிலே அதிகமாக பயணம் செய்யக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. இதற்குக் காரணம் பயணிகள் அதிகமாகவும், பஸ்கள் குறைவாக இருக்கிற

காரணத்தால் தான் இந்த நிலை உருவாகிறது. ஆகவே, இது போன்ற ''பீக் ஹவாஸ்''-இல் அந்தக் குறிப்பிட்ட தடங்களிலே ''எக்ஸ்ட்ரா'' பேருந்துகளை அனுப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பீக் ஹவர்ஸ்'' என்று சொல்லப்படுகிற அந்த நேரத்தில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, படிக்கட்டுகளில் பயணம் செய்கிறார்கள் என்ற நிலை இல்லை. சிலபேரைப் பொறுத்தவரையில் படிக்கட்டுகளில் பயணம் செய்வதுதான் அவர்களுடைய வாடிக்கையாக இருக்கிறது. சில பேர் முன் பகுதியிலே படிக்கட்டிலே நின்று கொண்டு ஒரு ஸ்டாப்பிலே இருந்து சென்று மற்றொரு ஸ்டாப் வந்தவுடன் இறங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அப்படி நின்று பயணம் செய்து உடனடியாக இறங்கிக் கொள்கிறார்கள். உள்ளே செல்லுங்கள் என்று கண்டக்டர் சொன்னால் கூட நான் அடுத்த ஸ்டாப்பில் இறங்கப் போகிறேன் என்று சொல்கிறார்கள். 100 மீட்டருக்கு ஒரு ஸ்டாப் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுகிறதே தவிர, நீங்கள் குறிப்பிடுவது போல் இல்லை. தேவையான பேருந்துகள் பல்லவன் போக்குவரத்துக் கழகங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. காளிராஜன்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பயணம் செய்யும் பயணிகள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், அதனை அனுமதிக்கின்ற நடத்துனர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிற நிலையைத் தவிர்க்கும் பொருட்டும், சாலைகள் அதே நிலையில் இருப்பதாலும் மக்கள் தொகை அதிகமாக ஆகி இருப்பதாலும், வாகனங்கள் நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம் அதிகமாகப் பெருகிக் கொண்டு போவதாலும் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டும் பேருந்துகளின் வாசலில் கதவுகள் பொருத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கருத்துக்களின் அடிப்படையில் முதலில் தொலை தூரப் பேருந்துகளில் கதவுகளைப் போட்டு நாம் இயக்கிக்கொண்டிருந்தோம். அந்தக் கதவுகள் பெரிய கதவுகளாக இருக்கின்ற நிலையில் அதிலே ஒரு சிங்கிள் லாக் இருக்கின்ற காரணத்தால் அந்தக் கதவுகளிலிருந்து வருகின்ற சத்தங்கள் அதிகரித்த காரணத்தால், படிப்படியாக அது குறைக்கப்பட்டு அதுபற்றி மீண்டும் பரிசீலித்த

1993 ஏப்ரல் 29]

காரணத்தால் அந்தக் கதவுகள் தேவையில்லை என்று முடிவு மேற்கொள்ளப்பட்டது. நகரப் பேருந்துகளில்தான் இதுபோன்று தொங்கிக்கொண்டு செல்வது, உள்ளே செல்லுங்கள் என்று சொன்னால் கூட செல்லாமல் அடுத்த ஸ்டாப்பிலே இறங்கிக்கொள்கிறேன் என்று சொல்வது போன்ற நிலை இருப்பதால் தான் அரசு வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. நீங்கள் உள்ளே சென்று இருக்கையில் அமர்ந்துகொள்ளலாம் என்று வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. ஒரு பேருந்தில் 80 பேர் பயணம் செய்கிற வாய்ப்பு இருக்கிறது. அப்படி 80 பேர் இல்லாமல் 60 பேர் பயணம் செய்கிறபோது அவர்களில் 10 பேர் பக்கத்திலே படிக்கட்டிலே நின்றுகொண்டு, தங்களுடைய வேலைப்பளுவின் காரணமாக விரைந்து செல்லவேண்டும் என்று எண்ணுவதால் இதுபோன்ற நிலை ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல நகரப் பேருந்துகளில் அதுபோன்ற நிலையை உருவாக்க முடியாது. காரணம் இங்கே 100 மீட்டருக்கு ஒரு பஸ் ஸ்டாப் இருக்கிறது. ஆகவே அதிலே கதவுகள் போட்டு மக்களை ஏற்றி, பிறகு அடைத்துக்கொண்டு, மறுபடியும் திறந்து இறக்கிவிடுவது என்ற நிலையை உருவாக்குவது சாத்தியக்கூறாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டுப் பயணம் பரலோகப் பயணம் என்று நாம் அங்கே எழுதிப் போட்டிருக்கிறோம். அதைப் பார்த்துக்கொண்டே, சிலபேர் படிக்கட்டில் நின்றுகொண்டே பயணம் செய்கிற காரணத்தால் விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. காளிராஜன் அவர்கள் சொன்னதுபோல் ஆட்டோமெட்டிக் கதவுகள் பேருந்துகளில் பொருத்தினால் இந்த நிலையைத் தவிர்க்கலாம். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் பயணிகள் செல்கிறபோது அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக 'படியிலே பயணம், நொடியிலே மரணம்' என்றுதான் எழுதி வைத்திருக்கிறோமே தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆட்டோமெட்டிக் கதவுகள் போடமுடியுமா என்று கேட்டார்கள். அது நிரந்தரமாக பிக்அப் செய்யப்படுகிற இடத்திலேதான் சரியாக இருக்கும். இதுபோன்ற பேருந்துகளில் பயணம் செய்கிற போது 'ஜோல்ட்டிங்' வருகிற நேரத்தில் அந்தக் கதவுகளைச் சரியான முறையில் சாத்த முடியாது. அந்த சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால் ஆராய்ச்சி செய்து அதற்கேற்ப பொறியாளர்களின் ஒப்புதல் பெற்றதற்குப் பிறகு சாத்தியக்கூறுகள் இல்லை என்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளில் இட நெருக்கடி இருக்கின்ற நிலையில் அவசர, அவசியத்தின் காரணமாக கண்டிப்பாகச் செல்லவேண்டும் என்ற நிலை இருப்பதன் காரணமாக அதிலே மக்கள் ஏறுகிறார்கள். எனவே இதிலே கண்டக்டர்களையோ, பயணிகளையோ குறை சொல்வதற்கில்லை. அதிகமாக வண்டிகள் சென்றாலும் கூட இதுபோன்ற நெருக்கடி இருக்கின்ற காரணத்தால் அந்தப் பேருந்துகளில் இருக்கின்ற அத்தனை சீட்டுகளையும் எடுத்துவிட்டு பின்புறத்தில் ஆறேஆறு பேர் மட்டும் அதாவது வயது வந்தவர்கள், ஊனமுற்றவர்கள் அமர்வதற்கு சீட்டுகள் அமைத்துவிட்டு, மீதி இருக்கிற முழு இடங்களிலும், அதாவது ஒரு அரை மணி நேரமே பயணம் செய்கிற காரணத்தால் அங்கே அலுமினியத்தில் பென்சிங் போட்டு லேடீஸ் ஒரு பக்கமும், ஜென்ட்ஸ் ஒரு பக்கமும் நின்று பயணம் செய்வதற்கு ஏதுவாக அமைக்கப்படுமா? ஏனென்றால் பொதுமக்கள் விரும்புகிறார்கள் குறிப்பிட்ட சில தடங்களில் எத்தனை வண்டிகள் போட்டாலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் பொது மக்கள் இதை விரும்புகிறார்கள். எனவே அந்தமாதிரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது முதிர்ந்தவர்கள் மட்டுமல்ல பெண்களும் பயணம் செய்கிறார்கள். குழந்தைகளையும் வைத்துக்கொண்டு பயணம் செய்கின்றார்கள். ஆக இருக்கைகளை அகற்றமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல டர்னிங் பாயிண்ட் வருகிறபோது, நின்றுகொண்டிருந்தால் திடீரென்று ஒருவர் மீது ஒருவர் சாய்கின்ற வாய்ப்பு ஏற்படும். ஆகவே தான் இந்த இருக்கைகளை அகற்றிவிட்டு பயணிகள் பேருந்திலே பயணம் செய்கின்ற சாத்தியக் கூறுகள் அரசிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டங்கள் கடுமையாக இருந்தாலும் பஸ்களில் படிக்கட்டுகளில் பயணம் செய்வது மட்டுமல்ல பின்னால் இருக்கின்ற ஏணியிலேயும் நின்றுகொண்டு பயணம் செய்கிறார்கள். எனவே இதற்கு பிளையிங் ஸ்குவாட் (Flying squad) என்ற பறக்கும் படையை அமைத்து இந்த தவறுகளை செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டதைப் போல பறக்கும் படையும் இருக்கிறது. நம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே எடுத்துக்கொண்டால் 4 பறக்கும் படைகள் வைத்துக் கொண்டுதான் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறோம். நடத்துநர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு வந்ததற்குப் பிறகுதான் தமிழகத்தின் வரலாற்றில் இந்த 21 மாத காலத்தில் 4025 பேருந்துகளை கூடுதலாக இயக்கியிருக்கின்ற காரணத்தினால் இதுபோன்ற நிலைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே **சொன்னார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நான் வேடிக்கைக் காகச் சொன்னேன், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் படிக்கட்டில் நின்றுகொண்டு பயணம் செய்கின்ற நேரத்தில் விபத்துகள் தோன்றுகிறது. அந்த படிக் கட்டின் வாசலிலே 'படிக்கட்டுப் பயணம் நொடிக் கட்டில் மரணம்' என்ற ஒரு வாசகம் இருந்தபோதிலும் அதை பயணிகள் கவனிக் காமல் படிக்கட்டிலே நின்று பயணம் செய்கிறார்கள். அந்த நேரத்திலே விபத்து ஏற்பட்டு மரணம் அடைகிறார்கள். அப் போது மரணம் அடைந்த பிறகு அவர்களுடைய குடும்பத்தின் சார்பாக அந்த பேருந்து கழகத்தில் இருந்து இறந்தவர்கள் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று மோட்டார் வாகன விபத்து நீதி மன்றத்திலே வழக்குத் தாக்கல் செய்கிறார் கள். அப்படி அந்த படிக்கட்டில் நின்று பயணம் செய்தவர்களுக்கு அதற்குத் தகுதியுடையவர்களா என்று அமைச்சர் அவர்கள் மூல மாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டிலே பயணம் செய்து இறந்தாலும் சரி, அங்கே ஆக்சிடெண்டிலே இறந்துவிட்டாலும் சரி போக்குவரத்து சார்பாக அவர்களுக்கு வழக்கு தொடர் வதற்கு அந்த குடும்பத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. வழக்குத் தொடரலாம். அதேபோல போகிற நேரத்தில் அவர்களுக்கு இன்ஸூரன்ஸ் எவ்வளவு தொகை அவர்களுக்கு தகுதிக்கேற்ப வழக்குமன்றத்திலே இருந்து தீர்ப்பு தருகிறார்களோ அந்த தொகையை அரசு செலுத்துவதற்குத் தயக்கம் காட்டுவது இல்லை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 527, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

527—

மல்லசமுத்திரம், காளிப்பட்டி ஆதிதிராவிடர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*11271—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லசமுத்திரம், காளிப்பட்டி ஆதிதிராவிடர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் நலிவுற்ற நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கத்திற்கு உதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மல்லசமுத்திரம் ஆதிதிராவிடர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் அவ்வப்போது விவசாயத்திற்குச் சென்றுவிடுகின்ற காரணத்தினாலே அது தொடர்ந்து லாபத்தில் இயங்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விரும்புவார்களேயானால், அதிலே இருக்கின்ற தறிகள் அனைத்திற்குமே, அவர்களுடைய முயற்சியால் அனைவரும் தொடர்ந்து வேலைக்கு வர ஆரம்பித்தால் லாபத்தை ஈட்டமுடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 10 அம்சத் திட்டங்களைத் தீட்டி, ஆதிதிராவிடர்கள் மக்களையும் அர்ச்சகர்களாக்கி, துவண்டு கொண்ட சமுதாயத்தை தொழில் அதிபர்களாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மல்லசமுத்திரம் ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அந்த கைத்தறி நெசவாளர் சொசைட்டியில் பணிபுரியும் சங்க உறுப்பினர்களை மீண்டும் அந்தத் தொழிலில் ஈடுபடுத்த சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்க இந்தத் துறையில் ஏதேனும் சிறப்பு நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலைவிட அவர்களுக்கு விவசாயத்தின் மேல் மிக ஆவலாகவும் அக்கறையோடும் இருக்